# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.118/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | . பார்த்திபன் |
| Father's Name | : | . |
| Village | : | . |
| Taluk | : | . |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 14.07.2025.

1 முதல் 8 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு சொந்தமான விவசாய நிலம் ஊர்குடி கிராமத்தில் உள்ளது. ஆஜர் எதிரிகள் எனது நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர்கள். எனது நிலத்தின் எண்.408/2ல் எங்களது நிலம் சம்மந்தமாக எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை

இருந்து வந்தது. எங்களது இடத்தில் எதிரிகள் பயிர் வைத்திருந்தார்கள். நான் அவ்வாறு பயிர் வைக்கவேண்டாம் என்று சொல்லி நிறுத்திவிட்டேன். எனது அண்ணன் சம்பத் சென்னைக்கு வேலைக்கு சென்றுவிட்டார். நான் கழனியில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். எதிரிகள் என்னிடம் பத்திரம் கேட்டார்கள். 5ம் எதிரி முருகன் என்னை தெவடியா பையா என்று தகாத வார்த்தையால் திட்டி பத்திரம் எடுத்துவாடா என்று சொன்னார். நான் பத்திரம் எடுத்து வந்து அவரிடம் ஏன் அவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டேன். எங்கள் இருவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. 2ம் எதிரி அமரேசன் என்னை கண்ணத்தில் அறைந்தார் மற்ற எதிரிகள் கும்பலாக சேர்ந்துக்கொண்டு அடித்தார்கள். மேற்படி சம்பவம் கடந்த 2019ம் வருடம் நடந்தது. தேதி ஞாபகம் இல்லை. அந்த இடத்தில் எனது அண்ணன் மகன் பிரபாகரன் என்னுடன் வந்ததால் அவரையும் அடித்தார்கள். சம்பவத்தின்போது எனது அண்ணி அனுசியா மற்றும் எனது மனைவி கவிதா உடன் இருந்தார்கள். எதிரிகள் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. இது சம்மந்தமாக நான் வடவணக்கம்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

மனுவின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.